## 1. வெளியீடுகள்

### *சாளர வெளியீட்டுக்குழு*



அதுவரை காலமும் தனியாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த சாளரம் சுவர் சஞ்சிகையானது 2018ஆம் ஆண்டு முதல் மாணவர் ஆய்வு மன்றத்தின் கீழ் செயற்படும் ஒரு குழுவாகக் கொண்டுவரப்பட்டது. சாளரம் சுவர் சஞ்சிகையானது மொத்தம் 21 பக்கங்களைக் கொண்டது. இதில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், உரையாடல்கள், சித்திரங்கள், அரபு எழுத்தணி போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு சாளர வெளியீட்டுக்குழுவின் செயலாளராக மாணவி அப்ரா இல்யாஸ், உவ செயலாளராக மாணவன் ஏ.அலியார், உறுப்பினர்களாக நிஸாரா, சஹ்வானா, ரினோசியா, அஜீபா, சன்பறா, பாத்திமா, நவாஸ், நஸ்மா, நஸ்ரின், பயாஸா, அரூஸியா, பிரஸா, ரூபியா ஆகிய மாணவர்களும் செயற்பட்டனர்.

இதன் போது 2018ஆம் ஆண்டுக்கான முதலாவது சாளரம் சுவர் சஞ்சிகை பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி திங்கட் கிழமை சுதந்திர தின சிறப்பு இதழாக வெளியிடப்பட்டது. இதனை ஆரம்பித்து வைப்பதற்காக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடத்தின் பீடாதிபதி எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளீமி) அவர்கள் உட்பட துறைத் தலைவர்கள் மற்றும் சாளர வெளியீட்டுக்குழுவின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

ஈழநாட்டில் சுதந்திரம் எனும் தொனிப்பொருளின் கீழ் இச் சஞ்சிகைக்கான ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் சிறந்த ஆக்கமாக 2ஆம் வருட மாணவி

ஏ.எல்.எப். சன்பறாவினுடைய கவிதை தெரிவு செய்யப்பட்டு அதற்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.




ஐவரிகளில் கவிதை எனும் தலைப்பில் ஒரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. படம் ஒன்றை வழங்கி அதற்குப் பொருத்தமான வகையில் ஐந்து வரிகளுக்குட்பட்ட கவிதை அமைத்து அனுப்பும்படி அறிவிக்கப்பட்டது. அதன்படி கிடைக்கப்பெற்ற கவிதைகளில் சிறந்த கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு சாளரம் சுவர் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டன.

இரண்டாவது சுவர் சஞ்சிகை பொதுவான தலைப்புக்களில் வழங்கப்பட்டு ஆக்கங்கள் சேகரித்து பிரசுரிக்கப்பட்டன. மூன்றாவது சுவர் சஞ்சிகை சிறுமி ஆஷிபாவின் படுகொலையை அடிப்படையாகக் கொண்டு ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

நான்காவது சுவர் சஞ்சிகையானது ரமழான் மாத சிறப்பு ஆக்கங்கள் தாங்கிய சஞ்சிகையாகப் பிரசுரிக்கப்பட்டது.



இதன் பின்னர் பிரசுரிக்கப்பட்ட ஐந்தாவது சுவர் சஞ்சிகையானது சாளரத்துக்குக் கிடைக்கப்பெற்ற கைவண்ணங்களை மட்டுமே முழுமையாக சுமந்ததாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆறாவது சாளரம் சுவர் சஞ்சிகையானது பொதுவான தலைப்புக்களைத் தாங்கி பிரசுரிக்கப்பட்டது.









வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி எமது பீடத்தில் மூன்று நூல்கள் வெளியீடு செய்யப்பட்டன. இதற்கு எமது உப வேந்தர் முதலாக பீடாதிபதி, துறைத் தலைவர்கள், உப பதிவாளர், விரிவுரையாளர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தார்கள.
















இவர்களது கரங்களால் வாசிப்பு மாத சாளரம் சிறப்பு சுவர் சஞ்சிகை திறந்து வைக்கப்பட்டது.

அதே தினத்தில் சாளர வெளியீட்டுக் குழுவினால் நூல் அறிமுக நிகழ்வொன்று





மேற்கொள்ளப்பட்டது. அதாவது, புதிதாக வெளிவந்த பன்னிரண்டு நூல்களை அறிமுகம் செய்து வாசிப்பைத் தூண்டும் ஒரு முயற்சியே இதுவாகும். இவை குறித்த தினத்தில் முழு நாளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

சாளரத்துக்குக் கிடைக்கப்பெற்ற ஆக்கங்களில் சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை எம்மால் விடிவெள்ளி, நவமணி ஆகிய பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றில் சில கீழே படங்களில்…


நல்லிணக்கத்துக்கு வேட்டுவைக்கும்
போதைப் பொருள் பாவனை


இணையக் கைதி
இணைந்து கொண்டோம்
இணையத்தில்
இணைபிரியா
நண்பர்களாய்...!
இணைந்துக்
கொண்டோம்
உலகில்
பல்லாயிரம்
நண்பர்களை...!
இதயத்தில்
கருத்தரித்த
கருத்துக்களை
இணையத்தில்
பிரசவித்தோம்...!
வலையமைப்புக்கள் - பல
உருவெடுத்தன
இணையமைப்பை
சீர் செய்ய...!
போலிக் கணக்குகள் - பல
வார்த்தைகளால்
போர்க்கொடி தூக்கின
பல சோலிகளும் மறந்து...!
சிறைக் கைதிகளும்
சில வேளை
சிறை வாசல்
திறக்கலாம்...!
இணையக் கைதிகளை
பிணைபெறுக்க
வழியேதுமுண்டோ?


நவீன வேட்கைகளை
நாம் எவ்வாறு
கையாள்கிறோம்?


ஒற்றுமைக்கான
அடிப்படை